முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் மூர்க்க நாயனார் அருளிய ஒளி சூட்சும ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

06.01.2019, ஞாயிற்றுக்கிழமை

1. **கனிகிரிநாதா கந்தவேலா**
**காக்கும் சக்தியாக கலியுகத்தில்**
**துணிவுபட தருமம் பெருக்கியே**
**தேசிகனாக அரங்கனாக வந்த ஐயனே**

2. அய்யனே உன் பெருமை கூறி
அகிலமதில் ஒளி சூட்சும நூலை
மெய்யுடனே **விளம்பி சிலை திங்கள்**
**மொழிகுவேன் இருபானீர் திகதி கதிர்வாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 22ம் நாள் 06.01.2019, ஞாயிற்றுக்கிழமை)**

3. **வாரமதில் மூர்க்க நாயனார் யானும்**
வழங்கிடுவேன் உலகோர் நலம் பெற
ஆறுமுக அரங்கமகா ஞானி
அருட்தயவு ஞானவழிகள் தன்னை

4. தன்னிலே உலக மக்கள் ஏற்று
தவராசன் பிரணவக் குடிலுக்கு
மண்ணுலகில் வருகை புரிந்து
மக்களெல்லாம் ஆசி தீட்சை பெற

5. தீட்சையுடன் தானதரும நெறிகளை
தெரிவிப்பேன் ஏற்று வருதலுற
தீட்சை பலன் குருவருள் பலனால்
தேசமெங்கும் ஞானவழி பெருமாற்றம்

6. பெருமாற்றம் காணக் கூடும்
பேதமுற மக்கள் எல்லாம் இணைந்து
தருமமுடன் ஆறுமுகன் வழிபாட்டை
தரணியோர் பின்பற்றி வர

7. வருகவே வையகம் மாறும்
வருகவே கலியுகம் எங்கும்
தருமபலம் பெருகி வருக வருக
தணிகாசலனார் ஆளுமை உருவாகும்

8. ஆகவே கலிகால கஷ்டம் விலக
அவசியம் பேரிடர்களும் விலக
வகைபட ஞானஆட்சி காலம்
வர வேண்டும் கலியுகம் தன்னில்

9. தன்னிலே தலைவனாக முருகனை
தரணியோர் ஏற்று நன்கு
அண்ணலின் உண்மை வழிகளை
அறநெறிகளை ஏற்று வருக

10. வருகவே அரங்கன் சீடர்களான
வல்லமையான தொண்டர்கள் மூலம்
தருமம் பரவி வளம் காணும்
தக்கபலமும் கூடி சிறப்பு காணும்

11. காணவே கலிகால சிக்கல்கள்
கந்தன் கருணையால் விலகும்
ஞானபூமியாகவே நன்மைகள் கூடும்
நாட்டிய ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் மூர்க்க நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

பழனிமலை வாழும் கந்தவேலனே உலகின் மக்களைக் காக்கும் சக்தியாக இந்த துன்பம்மிக்க கலியுகத்தினிலே தாயினும்மிக்க தயவுடன் துணிவுடன் எல்லையில்லாது தர்மத்தினை பெருக்கி முருகப்பெருமானின் அவதாரமாக ஆறுமுக அரங்கமகா தேசிகனாக வந்துதித்திட்ட ஐயனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 22ம் நாள் 06.01.2019, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே மூர்க்கநாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் மூர்க்கநாயனார்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனார் அருளும் அருள்மிக்க தயவே வடிவான ஞானவழிகள் தன்னை உலக மக்களெல்லாம் ஏற்றுக் கொண்டு தவராசன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலிற்கு வருகை தந்து மக்களெல்லாம் ஆறுமுக அரங்கனின் திருவடி பணிந்து தீட்சை உபதேசம் அடைந்து அரங்கன் உபதேசவழி நடப்பதுடன் அவரவரால் இயன்ற அளவு தானதருமங்களை செய்து வரவர, தீட்சையின் பலன்களாலும் குருவருளின் பலனினாலும் நாடெங்கும் ஞானவழிகளின் மூலமாக பெரும் மாற்றங்கள் விரைந்து உண்டாகிடும். பேதாபேதங்கள் எல்லாம் நீங்கி மக்களெல்லாம் ஒன்றிணைந்து தருமத்துடன் முருகப்பெருமானின் வழிபாட்டினை உலக மக்களெல்லாம் பின்பற்றி வரவர, இந்த உலகமே மாற்றம் அடைந்திடும்.

உலகோர் எல்லாம் அரங்கனின் கொள்கைகளை பின்பற்றி வரவர, இந்த கலியுகமும் வலுவிழந்து கலியுகம் எங்கும் தருமபலம் பெருகி பெருகி முருகப்பெருமானின் ஆட்சி உலகினில் உருவாகிடும்.

ஆதலினால் கலியுகத்தின் கஷ்டங்கள் எல்லாம் விலகிட அவசியம் உலகினை அச்சுறுத்தும் பேரிடர்களும் விலகிட, வகைபட ஞானஆட்சி காலம் இவ்வுலகினில் விரைந்து வந்திட வேண்டும்.

ஆதலினால் ஞானத்தலைவன் முருகப்பெருமானை உலகின் தலைவனாக உலக மக்களெல்லாம் ஏற்றுக் கொண்டு முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கனின் உண்மை வழிகளை அறநெறிகளை ஏற்றுக் கடைப்பிடித்து வரவர, ஆறுமுக அரங்கனின் சீடர்களாக உள்ள தொண்டர்கள் மூலமாக தர்மம் உலகமெங்கும் பரவி தருமசக்தி பெருகி உலகமே வளம் காணும். உலகினில் நன்மைகள் கூடி தக்க தருமபலமும் பெருகி சிறப்பினை காணும்.

கலியுகத்தின் சிக்கல்கள் எல்லாம் முருகப்பெருமானின் கருணையால் விலகிடும், இவ்வுலகம் ஞானபூமியாக ஆகிட நன்மைகள் பெருகிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் மூர்க்கநாயனார்.

–சுபம்–